**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.**07.10.2025

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.5 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 09.09.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | | **திரு.ஆனந்தன்** | **இனம்** | **ஆண்** |
| வயது | | 40/2025 | **தொழில்** | வட்டாட்சியர், வாலாஜா |

துவக்க நேரம் 12.55 P.M

சாட்சி முன்னிலை, உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் முதல் விசாரணை:–

1. நான் தற்பொழுது, வாலாஜா தாலுக்கா வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்றேன். வழக்கில் தொடர்புடைய கத்தாரிக்குப்பம் கிராம சர்வே எண்.114/1 தொடர்புடைய ஆவணங்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய்பட்டு குறியீடு செய்யப்பட்டடுள்ளது. அந்த ஆவணங்கள் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளதால் என்னை சாட்சியம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளேன்.

2. அசையா சொத்து தொடர்பான பட்டா வழங்கும் அதிகாரத்தில் சில பிரிவுகள் உள்ளன. இதில் வட்டாட்சியர், கிராம நத்தத்தில் வீட்டு மனையை ஒரு நபருக்கு ஒப்படைவு செய்யும் அதிகாரம் உள்ளது. மேலும் ஒரு பட்டாவில் உட்பிரிவு செய்யும் அதிகாரமும் உள்ளது. மற்ற பட்டா மாற்றம், வழங்கல் தொடர்பான

அதிகாரங்கள் அந்தந்த தனி மற்றும் மண்டல துணை வட்டாட்சியர்களுக்கு உள்ளது.

3. பட்டா வழங்குவதில் முறைகேடு நடைபெற்றால் அதனை மாற்றம் செய்யும் அதிகாரம் அல்லது ரத்து செய்யும் அதிகாரம் வட்டாட்சியருக்கு இல்லை. ஏற்கனவே முறைகேடாக பட்டா வழங்கப்பட்டிருந்தால், நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டு அதில் முறைகேடு ஏற்பட்டிருந்தால் அதனை திருத்தம் செய்ய அல்லது மாற்றம் செய்ய மாவட்ட வருவாய் அலுவலருக்கு அதிகாரம் உள்ளது. நத்தம் நிலவுடமை திட்டத்தில் ஒரு மனை ஒப்படைவு செய்யபட்டு அதில் முறைகேடு ஏற்பட்டிருந்தால் அதனை மாற்றம் செய்ய உட்கோட்ட வருவாய் அலுவலருக்கு அதிகாரம் உள்ளது.

4. பட்டா எண்.290 ல் பாஸ்கர ராவ் மற்றும் தாமோதர ராவ் ஆகியோர்கள் பெயர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு வேதாத்திரி மகன் தாமோதர ராவ் பெயருக்கு பட்டா எண்.290 ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது. பட்டா எண்.290 ல் பாஸ்கர ராவ் மற்றும் தாமோதர ராவ் ஆகியோர்கள் பெயர்கள் முதலில் இடம்பெற்றுள்ளது. மேற்படி கூட்டுப்பட்டா அதன்பின்னிட்டு தனிப்பட்டாவாக தாமோதர ராவ் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது தொடர்பான நடவடிக்கை குறித்த எவ்வித ஆவணமும் எங்கள் அலுவலகத்தில் பட்டா எண் தொடர்பான கோப்பில் இல்லை.

5. பட்டா எண்.290 வேதாத்திரி மகன் தாமோதர ராவ் பெயருக்கு மட்டும் பின்னிட்டு பட்டா மாற்றம் எதன் அடிப்படையில் மேற்கொண்டார்கள் என்று எவ்வித ஆவணங்களும் இல்லை. ஒரு கூட்டு பட்டாவில் உள்ள ஒரு நபருக்கு மட்டும் தனிப்பட்டா வழங்கப்பட்டால், ஏற்கனவே உள்ள பட்டா எண்ணை தவிர்த்து வேறு புதிய பட்டா எண் வழங்குவதில் இரு வழிகள் உள்ளன. யாருக்கு

பட்டா தனியாக வழங்கப்படுகிறதோ, அந்த நபருக்கு ஏற்கனவே அந்த ஊரில் வேறு சொத்துக்கள் இருந்தால் புதிய பட்டா வழங்கப்படமாட்டாது. வேறு சொத்துக்கள் இல்லை என்றால் மட்டுமே அவருக்கு புதிய பட்டா எண் வழங்கப்படும்.

6. பட்டா எண்.290ல் தாமோதர ராவுக்கு ச.எண்.114/1 மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு சர்வே எண்கள் இதில் குறிப்பிடப்படவில்லை. Ex.X8ன்படி வேதாத்திரியின் மகன் தாமோதர ராவ் தனது மகன் வேதாத்திரி பெயருக்க கடந்த 28.04.2015 அன்று ச.எண்.114/1ல் தொடர்புடைய சொத்தை தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார்.

7. தமிழ் நிலம் கணினி "அ" பதிவேடு கடந்த 2016 ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வந்தது. கடந்த 2016 ஜனவரிக்கு முன்பு பழைய கணினி சிட்டா நடைமுறையில் இருந்தது. அப்பொழுது, பட்டா எண்.290 கூட்டுபட்டாவாக இருந்தது.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ;

1. பட்டா மாறுதலில் கண்ணன் மற்றும் திருமாறன் பெயர்கள் இடம்பெற்றுள்ளதா என்றால், இல்லை. கடந்த 22.04.2015 அன்று வழங்கப்பட்ட பட்டா எந்த நடைமுறையை பின்பற்றி வழங்கப்பட்டது என்றால், தமிழ் நிலம் வருவதற்கு முன்பாக மேற்கண்ட தேதியில் பட்டா வழங்கப்பட்டிருந்தால், உரிய நபர் துணை வட்டாட்சியருக்கு பட்டாவை பெறுவதற்கான ரூ.30/– கட்டணம் செலுத்திய பின் துணை வட்டாட்சியரின் மேலொப்பம் இட்டபிறகு அந்த பட்டாவை வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக அந்த நபருக்கு வழங்கப்படும்.

2. கடந்த 28.04.2015 அன்று தாமோதர ராவ் என்கின்ற தாமோதரன் தனது மகன் வேதாத்திரி பெயரில் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில்தான் வேதாத்திரி பெயருக்கு பட்டா மாற்றம் செய்தோம் என்றால் சரிதான். பட்டா எண்.290 தமோதரன் பெருக்கு கடந்த 22.04.2015 அன்று எங்கள் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான்.

3. Ex.X8 அறிக்கையின் 2 வது பக்கத்தில் 2 வது பத்தியின் கடைசி மூன்று வரிகளில் பட்டா எண்.290 தாமோதர ராவ் பெயருக்கு வழங்கப்பட்டது தொடர்பான, கோப்பு எண், விண்ணப்ப எண், வருடம், நாள் போன்ற விவரங்களை அலுவலகத்தில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை என்று நாங்கள் குறிப்பிட்டு வழங்கியுள்ளோம் என்றால், சரிதான்.

4. Ex.X8 ன்படி, பட்டா மாற்றம் செய்ததில் முறைகேடு இருந்ததாக இந்த அறிக்கையில் நாங்கள் குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால், இல்லை. ஒருவர் பெயருக்கு எத்தனை பட்டா வேண்டுமானாலும் வழங்கலாம் என்றால் சரிதான். தாவா சொத்து ச.எண்.114/1 யார் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் தாமோதர ராவ் மகன் வேதாத்திரி பெயரில் வழங்கப்பட்டுள்ளது. தாமோதரராவ் மகன் வேதாத்திரி பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா எண் என்னவென்றால், பட்டா எண்.1115 ஆகும்.

5. Ex.X8 அறிக்கையுடன் ஒரு வில்லங்க சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது என்றாலும், இந்த வில்லங்க சான்றிதழின்படி வில்லங்கம் எதுவும் இல்லை என்றாலும், சரிதான். Ex.X8 அறிக்கை உண்மையானதுதான் என்றால், சரிதான்.

முடிவு நேரம் 02.05 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Raniipet.